செ.வெ.எண்:22 நாள்:14.03.2017

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**நாகப்பட்டினம் நகராட்சி, பால்பண்ணைச்சேரி, நாகப்பட்டினம் ஒன்றியம் வடகுடி சாலை, சிவசக்தி நகர், தெத்தி பகுதிகளில் சீமைக்கருவேலை மரங்கள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள், மாவட்ட தலைமை நீதிபதி திரு.பாலகிருஷ்ணன்,தலைமை குற்றவியல் நீதிபதி திரு.எஸ்.பக்கிரிசாமி , நாகப்பட்டினம் மாவட்ட சீமைக் கருவேல மரங்கள் அகற்றுதலுக்கான ஆணையர் மற்றும் வழக்கறிஞர் திரு.கே. ஜம்புலிங்கம் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர்.**

நாகப்பட்டினம் நகராட்சி, பால்பண்ணைச்சேரி, நாகப்பட்டினம் ஒன்றியம் வடகுடி சாலை, சிவசக்தி நகர், தெத்தி பகுதிகளில் சீமைக்கருவேலை மரங்கள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள், மாவட்ட தலைமை நீதிபதி திரு.பாலகிருஷ்ணன், தலைமை குற்றவியல் நீதிபதி திரு.எஸ்.பக்கிரிசாமி, நாகப்பட்டினம் மாவட்ட சீமைக் கருவேல மரங்கள் அகற்றுதலுக்கான ஆணையர் மற்றும் வழக்கறிஞர் திரு.கே.ஜம்புலிங்கம் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையின் தீர்ப்பில் சீமைக் கருவேல மரங்களை வேருடன் அகற்றிட உத்தரவிடப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுமார் 17,080 ஏக்கர் அளவில் சீமைக் கருவேல மரங்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இதில் சுமார் 2532 ஏக்கர் அளவில் சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, வனத்துறை, வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, இந்து சமய அறநிலையத்துறை, சுகாதாரத்துறை உள்ளிட்ட அனைத்து துறையினரும் தமக்குச் சொந்தமான அலுவலக வளாகங்கள், நிலப்பரப்புகள், சாலை ஓரங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொது இடங்களிலும் மற்றும் தனியாருக்குச் சொந்தமான இடங்களிலும் அகற்றப்படாமல் மீதமுள்ள சீமைக் கருவேல மரங்களை வரும் 20.03.2017 க்குள் முற்றிலுமாக வேருடன் அப்புறப்படுத்திட வேண்டும். மேலும் சீமைக் கருவேல மரங்களை ஒழிப்பதில் அரசு அலுவலர்களோடு பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் ஒத்துழைப்போடு செயல்பட்டு மாவட்டத்தில் சீமைக் கருவேல மரங்களை முற்றிலும் அகற்றிட முன்வர வேண்டும்'' என தெரிவித்தார்.

முன்னதாக சீமைக் கருவேல மரங்களை அகற்றுதல் குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் நாகப்பட்டினம் மாவட்ட சீமைக் கருவேல மரங்கள் அகற்றுதலுக்கான ஆணையர் மற்றும் வழக்கறிஞர் திரு.கே. ஜம்புலிங்கம் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வின் போது நகராட்சி ஆணையர் திரு.ஜான்சன், வட்டாட்சியர் திரு.தமிமுல் அன்சாரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சந்தானம், திரு.முருகேசன், அலுவலர்கள் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**